Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889)ூ ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஞு ஆவணி மீ சுஉ வெள்ளிக்கிழமை (21 August 1964) [இல-உ0]

## கிரேக்கதத்துவ ஞானம்

[ஐ. தம்பிமுத்து, B. A. Lond, (அரசகரும மொழி அலுவலகம்)]

எப்பொருளையும் தனிமையில் வைத்து அதன் சிறப்பியல்புகளையேனும் அதன் உண்மை மதிப்பினையேனும் கணித்தல் எல்லோர்க்கும் எளிதன்று. சிலர்க்கு இது சிறிதளவிலேனும் முடியாத காரியமாகும், ஆனால் ஒரு பொருளை அதன் இனத்தைச் சேர்ந்த சில பொருள்களுடனுவது வைத்து ஏற்றத்தாழ்வினை ஆராய்ந்து மதிப்பினைக் காணல் எல்லோருக்கும் எளிதாகும், இம்முறையில், எமது என்று, நாம் குறித்துப் பேசும் பொதுச் சொத்துகளுள் ஒன்ருண இந்து தத்துவ ஞானத்தின் சிறப்பினை எடுத்துககாட்டுதறபொருட்டு உலகத்துப் பல்வேறு தத்துவ ஞானங்களை ஆராய்வது எமது நோக்கமாகும், முதலில் கிரேக்க தத்துவ ஞானத்தை எடுத்துக்கொள்வோம்,

முதலில் கிரேக்க தத்துவ ஞானத்தை நாம் எடுத்துக் கொண்டதனுல் உலகத்துத் தத்துவ ஞானங்களுள் கிரேக்க தத்துவ ஞானமே முதலில் தோன்றியதென்று கொள்ளலாகாது மேல் நாட்டுத் தத்துவ ஞானிகளும் ஆதித்தத்துவ ஞானமென்பது உண்மையில் கிரேக்கதத்துவ ஞானமென்றே கருதுகின்றனர். அதுமட்டுமன்றித் தத்துவ ஞான வரலாறுகளில் இந்து தத்துவ ஞானத்தை முற்ருக விலக்கிவிடுகின்றனர். அவர்கள் இந்துத் தத்துவ ஞானத்தில் கவர்ச்சிகொண்டு கற்றுக்கொள்ளாமையே யன்றிப் பிறிதொன்றும் இதற்குக் காரணமாகாது. ஆனுல் இந்துதத்துவஞானம் கிரேக்க தத்துவ ஞானதிற்கு எத்தனையோ பல ஆண்டுகள் முந்தியது என்பதற்கு வேதங்கள் ஆணித்தரமான சான்றுகளாம். எனினும், காலம் பற்றிய ஆராயச்சி எமது நோக்கில் இல்லாமையினுல் அப்பேச்சினைவிட்டு மேற் செல்வது நலம.

ஐரோப்பிய தத்துவ ஞானத்திற்கு வழிகாட்டியான கிரேக்க தத்துவ ஞானத்தின் தந்தை தேல்சு என்பவராவர். இவர் ஐயோனியா நாட்டில் மிலெற்றசு என்ற இடத்தில் ஏறக்குறைய கி மு 640 — 540 என்ற காலத்தில் வாழ்ந்தவர் எனக் கருதப்படுகின்றது. விஞ்ஞானியென்று உலகில் முதலறியப்பட்டவர் இவரேயாவர் "ஏழு அறிஞர்களுள் ஒருவர்" என்று இவரைக் குறிக்கும் வழக்குமொன்றுண்டு. பிற்காலத்தில் மனிதனுடைய சுகவாழ்க்கைக்கான வசதிகளைக் கண்டுபிடிக்க உதவிய பெரும் விஞ்ஞானத்துறைகளுக்கு வித்திட்டவருமிவரேயாவர். முதலில் சூரிய கிரணத்தைக் கணித்துக்கண்ட பெருமை இவருக்கேயாகும்.

ஆதிதொட்டு அந்தம்வரை கிரேக்க தத்துவ ஞானம் மெய்ப்பொருள்பற்றிய சிக்கலைத் தீர்க்க அறிஞர் பின் அறிஞர் செய்த முயற்சியின் வரலாருகும். அதாவது உலகத்தில் பலவாகக்கிடக்கும் பொருள்களெல்லாம் ஏதோ ஒரு பொருளிலிருந்தே பிறந்தனவென்றும் அப்பொருள் எதுவென்றும தீர்க்கவே இவர்கள் முயன்றனர். இவர்களுள் வழிகாட்டியாகிய தேல்சு "எப்பொருளால் இவ்வுலகானது?" என்ற கேள்விக்குப் பரம்பரையாக நிலவிவந்த புராணமுறை விளக்கங்களை நிராகரித்து முதன்முதல் விஞ்ஞான முறையில் "நீர்" என்று பதில் கொடுத்தார். அதாவது தண்ணீரேதான் இவ்வுலகின் மூலப்பொருளென்றும், தண்ணீரிலிருந்தே சர்வமும் தோன்றினவென்றும் சொன்னர் இவர் தண்ணீரேதான் மூலப்பொருளென்று எக்காரணம்பற்றிச் சொன்னுர் என்று அறிந்துகொள்வதற்கு எழுத்தில் எமக்கு ஒன்றுங்கிடையாது. ஆயினும், எதுகாரணம்பற்றி இவர் இவ்வாறு சொன்னுரென்று ஊகித்தறிதல் எமக்கு இடராகாது. அறிவின் வளர்ச்சி அன்று இருந்த நிலையில் பௌதிகத் தோற்றப்பாடுகள் பல இக்கொள்கையை வலியுறுத்துவனவாகத் தோற்றியிருக்கலாம். ஏனெனில், தண்ணீர் ஆவி வடிவத்திலும் இன்னும் திண்மச் சடப்பொருள்களிலும திரவவடிவத்திலும காணப்படுகின்றது, ஆவி மேலே எழுதலையும் சூரிய கிரணத்தையும் கண்ட அக்காலமக்கள் சூரியனும் அதையொத்த பிற பொருள்களும் "தண்ணீர் எடுக்கின்றன" என்று கருதினர் மழைநீரைப் புவி உறிஞ்சுவதனுலும் தெலுத்தாக்கள், மண்படிவுகள் ஆகியன உண்டாகு முறையினுலும் தண்ணீர் மண்ணுக மாறியதாகக் காணப்பட்டது. பனயுண்டாவதும், பனிநீர் மேலெழும்புவதும் மண் ஈரப்பற்ருக மாறுகின்றதென்ற நம்பிக்கையையுண்டாக்கியது. தண்ணீரின் மாறுமியல்புகள் என்று கொள்ளப்பட்ட இத்தோற்றப்பாடுகளும், தண்ணீர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது என்ற உண்மையும், தேல்சின் நம்பிக்கையை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### நற்சிந்தனை

சாந்தம் பொறுமை
தயைதவந் தானமிகு
மாந்தருக்குத் துன்பம்
மருவுமோ — சாந்தனையும்
அன்னுர்பால் அன்புவைத்து
ஆரறிவார் என்றகுரு
தன்னுணை போற்றல் தவம்.

## கந்தபுராண உரை வெளியீட்டு விழா

—0—

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் கேள்விப்படி பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற 'கந்தபுராண உரை' நூலின் முதலாஞ் சஞ்சிகை வெளியீட்டு விழா சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 23-8-64 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 3 மணிக்கு, சபைத் தலைவர் திரு. த. முத்துச் சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும்,

அவ்வமயம் திரு. எஸ் சின்னத்துரை அவர்கள் முதற் பிரதியை வாங்குவார்கள்,

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார் த. குமாரசுவாமிப்பிள்ளை. வித்துவான் பொன். முத்துக்குமாரன், வித்துவான் க. கி. நடராஜன், வித்துவான் இ. திருநாவுக்கரசு, திரு மு. வைத்தியலிங்கம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவார்கள்.

—0—

## வெள்ளையறிக்கைக் கருத்தரங்கம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சபை நாவலர் மண்டபத்தில் 13-9-64 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் வெள்ளையறிக்கை சம்பந்தமாக ஒரு கருத்தரங்கம் நடைபெறும். அவ்வமயம் முக்கியமாகச் சமய கல்வி சம்பந்தமான விஷயங்கள் ஆராயப்படும் சைவாபிமானிகளையும். சைவ சமயச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் மேற்படி கருத்தரங்கில் கலந்துகொள்ளும்படி விநயத்துடன் கேட்டுக்கொள்கின்ரேம், சைவசமயச் சங்கப் பிரதிநிதிகள் தங்கள் பெயர்களைக் கருத்தரங்க அழைப்பாளருக்கு 1-9-64-க்கு முன் அனுப்பி வைப்பார்களாக,

இ. திருநாவுக்கரசு,
அழைப்பாளர்,
வெள்ளையறிக்கைக்கருத்தரங்கம்
சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 20-8-64

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்,

இந்துசமயம்

## மாதிரி வினவிடைகளும் நினைவுக்குறிப்புகளும்

(முற்ரெடர் —2)

[ ஆசிரியர் திரு. ஆ. நவரத்தினம் அவர்கள் ]

சில தொடர்களை விளக்குதல்;

(1) "அகரவுயிர்.........."

'அ' என்னும் எழுத்தானது ஏனைய எழுத்துக்களுக்கு முதலாய் இருப்பதோடு, தன் அகரவொலி கலந்தே மற்றெல்லா எழுத்துக்களையும்பிறப்பிக்கின்றது. அதுபோன்றே முதல்வனுகிய இறைவனும் உயிருள்ளன உயிரில்லாதனவாகிய பொருள்கள் எல்லாவற்றுளும் பிரிவின்றிக் கலந்து, அவை நிலைபெறுதற்குக் காரணனுய் இருக்கின்ருன் என்பதை இத்தொடர் விளக்குகின்றது.

(2) "எரியுறு நீர்........."

நெருப்பைப் பொருந்திய நீர் சூடேறப்பெறுகின்றது. அப்போது அச்சூடு ஒவ்வொரு நீரணுவிலும் கலந்திருக்கிறது. சூடு பொருந்திய அந்நீரில் சூடு எங்ஙனம் வியாபித்திருக்கின்றதோ அவ்வாறே இறைவனும் எல்லா இடங்களிலும் தங்குபவன் என்பது இத்தொடரின் விளக்கம்.

(3) "மன்னுபவந் தீர்க்கும் மருந்து......."

ஆன்மாக்களுக்கு உண்டாகின்ற நோய்கள் இரண்டு. ஒன்று உடல்நோய்; மற்றது உயிர்நோய். இவற்றுள் உயிர்நோயே ஆன்மாக்களின் பிறவிக்குக் காரணமாயுள்ளது. அதுவே ஆணவம். அந்த ஆணவநோயைத் தீர்ப்பதற்குரிய மருந்து திருவருள், அம் மருந்தையுடையவன் வைத்தியநாதனுகிய இறைவன். எனவே, இறைவன் திருவருளாகிய மருந்தையூட்டி ஆணவமாகிய பிணியைப் போக்கி முத்தியாகிய பேரின்ப வாழ்வை ஆன்மாக்களுக்கு அளிக்கின்ருன் என்பது இத்தொடரின் விளக்கம்.

(4) "பொறியின்றி யொன்றும் புணராத புந்தி......"

புந்தி என்பது ஆன்மாவை. ஆன்மா இயல்பாகவே அறிவுப் பொருள். ஆனல் ஐம்பொறிகளின் துணைகொண்டே யாதொரு விஷயத்தையும் அறியக்கூடியது. அன்றி, இயல்பாகவே அறிவுப் பொருளாக இருக்கின்றமையால் பொறிகளின் உதவியின்றித் தானுகவே தனித்து நின்று அறியுமோவெனில் அதுவுமில்லை. எனவே ஆன்மா பொறிகளின் உதவியின்றி விஷயங்களை அறியமாட்டாத குறைபாட்டோடு கூடியது என்பது இத்தொடரால் விளக்கப்படுகிறது.

(5) "ஆன்மா சதசத்து......"

உயிருக்கு ஒரு தனி இலக்கணம் உண்டு அது, சார்ந்த பொருள்களின் தன்மையாய் நிற்றலாகும். சத்துப்பொருளாகிய சிவம் அசத்துப் பொருளாகிய மாயாமலங்களைச் சாராது. அசத்துப் பொருளாகிய சடங்கள் சத்துப்பொருளாகிய சிவத்தை அடையா. ஆன்மாவோ எனில் பந்த நிலையில் அசத்துப் பொருள்களாகிய மலங்களாற் கட்டுண்டு அசத்தாயும், முத்தி நிலையில் சத்துப்பொருளாகிய

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

ஸ்ரீ நல்லூர்க்கந்தன் பஜனை

## ஓங்கார மெய்ப்பொருளே!

( அளவையூர் — சஞ்சீவி )

வேல் முருகா வேல்முருகா வேல்முருகா வேல்
வேல் முருகா வேல்முருகா வேல்முருகா வேல்

நல்லூரிற் கந்தப்பனே வேல்முருகா வேல்
ஞானவடி வேலவனே வேல்முருகா வேல்
தில்லைச்சிவன் பாலகனே வேல்முருகா வேல்
சிவகுருவே பரம்பொருளே வேல்முருகா வேல். 1.

ஓங்கார மெய்ப்பொருளே வேல்முருகா வேல்
உமைதழுவும் சண்முகனே வேல்முருகா வேல்
பாங்கான மயிலழகா வேல்முருகா வேல்
பாந்தாமன் மருமகனே வேல்முருகா வேல். 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஸு ஆவணி மீ
சூ உ வெள்ளிக்கிழமை

## மதுபானத்தைப் பெருக்குவதா?

அண்மையில் நிதிமந்திரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் பொருள் நிலையைப் பெருக்குவதற்குப் பல வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று நாடெங்கும் பனை, கித்துள், தென்னை ஆகியவற்றிலிருந்து கள்ளுச் சேர்க்க வரி செலுத்துபவர்களுக்கு உத்தரவளிப்பதாகும். இதனால் கள்ளருந்தும் வேட்கையுடையவர்கள் அதனை எவ்விடத்திலும், எக்காலத்திலும் பெறக்கூடியதாகவிருக்கும். கள்ளருந்துபவர்கள் தொகையும் பெருக ஏதுவாயிருக்கும். கள் பஞ்சமா பாதகங்களு ளொன்றாக விலக்கப்பட்டது. கள் மனிதனுடைய அறிவைக்கெடுக்கும் போதைப் பொருள். "கள்ளினு மூளது கொல் கருத்தளிப்பதே" எனக் கச்சியப்பசிவாசாரியர் கள்ளின் தீமையை விளக்குகின்றார். ஒரு மனிதனுடைய அறிவை மயக்குவதற்குக் கள்ளைப்போலத் தீய பொருள் வேறொன்றில்லை யென்பது அவர் கருத்து. கள்ளருந்துபவன் அறிவை இழக்க நேருங் காலத்தில் தீய செயல்களைப் புரிய முற்படுவான். கள்ளருந்துபவர்கள் தொகை பெருக நாட்டில் குற்றங்களும் பன்மடங்காகப் பெருகும்.

இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்தே பாரதநாட்டில் மகாத்மா காந்தியடிகள் மதுவொழித்தலை ஆரம்பித்தனர். அவருடைய முயற்சியினுல் பல மாகாணங்களில் மது விற்பனை சட்ட மூலம் தடை செய்யப்பட்டது. பல வருடங்களுக்கு முன் இலங்கையிலும் மது நீக்கச் சங்கங்கள் தொண்டாற்றியதால் பல இடங்களில் சாராயம் விற்பனை செய்யும் தவறணைகள் மூடப்பட்டன. அச்சங்கங்கள் சோர்வடையப் பொது மக்கள் வேண்டுகோளுக் கிணங்க அத் தவறணைகள் மீண்டும் திறக்கப்பட்டன. இப்பொழுதும் வடமாகாணத்திலும் தென்னிலங்கையிலும் திரும்பவும் மது நீக்கத்தை உருப்படுத்துவதற்குரிய முயற்சியைக் கையாளப் பல அபிமானிகள் காலங்காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் கள் சேர்க்கும் தொழிலுக்குச் சலுகை காட்டுவது நாட்டுக்குப் பெருந் தீமையை விளைவிக்கும். 'தீவினைவிட்டீட்டல் பொருள்.' ஒரு மனிதனோ அல்லது சமூகமோ பொருளை நல்ல வழியில் சம்பாதிக்க வேண்டும். அதனை அவர்கள் தீய வழியிலீட்டினுல் அப்பொருளினுல் தீமையே விளையும். கள்ளருந்தும் பழக்கத்தினுல் நாட்டின் கலாச்சாரம் பெரிதும் பாதிக்கப்படும். பிறர் நம் நாட்டை இகழவும், அது காரணமாகவிருக்கும்.

நாட்டிலுள்ள மக்களை அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களாக வாழத் துணை செய்வதே அரசாங்கத்தின் கடமையாகும். இப் பண்புகள் விலைமதித்தற்கரியவை, அவற்றை இழந்தால் மக்கள் மாக்களாவார்கள். அரசாங்கம் மக்களுக்குத் தாய்போன்ற தாபனம். தாய் தன் பிள்ளைகளுக்குத் தீமையுண்டாகக்கூடிய எக்காரியத்தையும் புரியாள், அதேபோன்று எங்கள் அரசாங்கமும் தனது பிள்ளைகளாகவுள்ள பொதுமக்களுக்குத் தீமை செய்ய முன்வருதல்தகாது. ஆகவே இவற்றையெல்லாம் நன்குசிந்தித்து நாடடங்கலும் மரவரி மூலம் கள்ளிறக்குவதற்கு அநுமதியளிக்க நிறைவேற்றக் காத்திருக்கும் சட்டத்தை அரசாங்கம் நிற்பாட்டி வைக்குமென வெதிர்பார்க்கின்றோம். மரவரி மூலம் கள் இறக்க அநுமதியளித்துள்ள நமது வடமாகாணத்தில் அத்திட்டம் அங்குள்ள மக்களுக்கு எவ்வளவு தீமையை யுண்டாக்கி வருகின்றதென்பதையும் இச்சமயம் எவரும் சிந்தித்தல் வேண்டும்.

## நல்லைக் கந்தன் தேர்வெள்ளோட்டம்

சிவபெருமான் முப்புரங்களையும் அழிப்பதற்கு பூமியைத் தேராகவும் சூரிய சந்திரரைத் தேர்ச்சில்லாகவும் நான்குவேதங்களையும் குதிரைகளாகவும் அமைத்துச் சென்றனரென்ற வரலாற்றைப் புராணவாயிலாக அறிவோம், ஆலயங்களில் நடத்தப்படும் தேர்த் திருவிழா இவ்வைபவத்தையே குறிக்கின்றது. தேரின் பீடத்தில் இறைவன் எழுந்தருளி வரும்பொழுது தேர் சர்வாண்டங்களையும் பீடம் பிரபஞ்சத்தையும் குறிக்கும். பீடத்திலமர்ந்திருக்கும் இறைவன் சர்வ உலகங்களையும் அந்தரியாமியாய் இயக்குகின்றாரென்பதே தேர்த்திருவிழாவின் தத்துவமாகும்.

சிவபெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் பேதமில்லை, சிவன் மணி போன்றவர், முருகன் அதன் ஒளி போன்றவர், ஆகவே நல்லூர்க் கந்தசுவாமியார் தேரில் ஆரோகணித்து வரும் காட்சி முன்னர்க் கூறிய தத்துவத்தையே விளக்குகின்றதென்பதை அடியார்கள் சிந்திக்க கடவர், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பழையதேர் பழுதடைந்தமையினுல் அக் கோவிலுக்கு ஒரு புதுத்தேரை ஆக்குவதற்குக் கோயில் தர்மகர்த்தா அவர்கள் தீர்மானஞ்செய்து சென்ற வருடம் மகோற்சவ காலத்தில் ஐந்தாம் திருவிழாவிலன்று அவ்வேலையை திருவருளை முன்னிட்டு ஆரம்பித்தனர். இந்தியாவிலிருந்து திருவிடை மருதூர் பிரபல சிற்பாசாரியர் திரு. இரா, கோவிந்தராஜா அவர்களையும் பிற ஆசாரிமார்களையும் இந்த நாட்டு ஆசாரிமார்களையும் குறித்த வேலைக்கு அழைத்தனர். யாவரும் மிகவும் ஊக்கமாகக் கடமையாற்றி ஒரு வருட காலத்துக்குள் தேர் வேலையைப் பூர்த்தி செய்தனர். அடியார்கள் மனமுவந்து வேலைக்குப்பொருளுதவி புரிந்தமை வேலையைச் சீக்கிரமாக நிறைவெய்தத் துணையாகவிருந்தது

புதுத்தேர் பழைய தேரைப் போன்றே அமைந்திருக்கின்றது. ஆனுல் அது பழைய தேரிலும் பார்க்க அழகாகவிருக்கின்றது. கனம் பலம் கூடியது தேரின் கொடுங்கைகள் பவளக்கால்கள் தளங்கள் நல்ல வேலைப்பாட்டுடன் பல வர்ணங்கள் தீட்டப்பெற்றுக் கவர்ச்சியாகவிருக்கின்றன. சிற்பாசாரியர் திரு. இரா, கோவிந்தராஜா அவர்களையும் அவருடைய உதவியாளர்களையும் இவ்விதமாகத் திறமையுடன் முருகன் பணியையாற்றியமைக்கு அடியார்கள் பாராட்ட வேண்டும். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் நித்திய நைமித்திகங்களையும் திருப்பணிகளையும் கிரமமாக நடத்தி வருகின்ற கோயில் தர்மகர்த்தா ஸ்ரீமத் சண்முகதாசமாப்பாண முதலியாரவர்களுக்குச் சைவஉலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது. தேர் வெள்ளோட்டம் 20–8–64 வியாழக்கிழமை பிற்பகல் 2–30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. நூற்றுக் கணக்கான அடியார்கள் [illegible] ளோட்டத்தைப் பக்தியுடன் தரிசித்தனர்.

———

## (இந்துசமயம்) மாதிரி வினாவிடைகளும் நினைவுக் குறிப்புகளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனோடு இணைந்து சத்துப்பொருளாயும் நிற்கின்றது ஆகவே ஆன்மா சாரும் பொருட்கள் சத்தும் அசத்துமாய் இருத்தலின் அது சதசத்து என்பது இத்தொடரின் விளக்கம்.

(6) "ஊமன்கண்......"

பகற்காலத்திலே சூரியனுடைய ஒளி சகல ஜீவராசிகளுடைய கண்களுக்கும் புலப்படக்கூடியதாக இருந்தும் கூகை எனப்படுகின்ற கோட்டானின் கண்ணுக்குப் புலனுவதில்லை. இவ்வாறு புலனுகாத தன்மை சூரியனுடைய குற்றமுமன்று; கோட்டானின் குற்றமுமன்று. குற்றம் கோட்டானின் கண்ணிலேயுள்ள தசைநாரின் அமைப்பேயாகும். அதுபோல ஆன்மாவும் திருவருளாகிய ஒளியுள் இருந்தும் அவ்வொளியைப் பெருமை திருவருளின் குற்றமுமன்று; ஆன்மாவின் குற்றமுமன்று; ஆன்மாவைப் பற்றியுள்ள ஆணவத்தின் குற்றமேயாம் என்பதை விளக்கி நிற்கிறது இத்தொடர்.

(7) "விடிவாமளவும் விளக்கு......."

இரவின் அந்தகாரத்தை நாம் சிறிதளவு நீக்கித் தொழிலாற்றுவதற்கு, சிற்றொளி விளக்குகள் உபகாரமாய் இருக்கின்றன. இரவு கழிந்து சூரிய ஒளி பிரகாசித்ததும் இவை தேவையற்றுவிடுகின்றன. இவ்வாறே பிறவியெடுத்த ஆன்மாவுக்கு அதன் கன்மத்துக்கேற்ப (தநு, கரண, புவன, போகங்களாகிய) மாயைப் பொருள்கள் கிடைக்கின்றன. இவற்றைத் துணைக்கொண்டு ஆன்மா வினைகளை அனுபவித்து முதலவன் திருவருளைப் பெறுறதும் இம் மாயைப் பொருள்கள் பயனற்றுவிடுகின்றன என்பதை விளக்குகின்றது இத் தொடர்.

மேலும் இதை, ஆற்றைக் கடக்கும் வரையும் ஒருவனுக்கு ஓடம் துணையாக இருப்பதுபோல, பிறவியாகிய சமுத்திரத்தைக் கடக்கும் வரையும் ஆன்மாவுக்கு இம் மாயைப் பொருள்கள் துணையாக இருக்கின்றன என்பதாலும் விளங்கிக் கொள்ளலாம்.

(8) "ஏகப் பொருளாகி நிற்கும் பொருள்......"

பகற் காலத்திலே சூரிய ஒளியினுல் உலகத்துப் பொருள்கள் அவற்றின் வேறுபாடு தோன்ற நிற்கின்றன. இராக் காலத்திலே அப்பொருள்களின் வேறுபாடு தோன்றுவண்ணம் இருளானது ஒரே இருள்மயமாகக் காட்டி நிற்கின்றது. இவ்வாறே ஆன்மாவுக்குப் பிறவித்துன்பம், வீட்டின்பம் என்பவற்றை மறைத்து இருள்போலக் காட்டி நிற்கின்றதாகிய பொருள் ஆணவம் என்பது இதன்விளக்கமாகும்.

(9) "இருட்பாவைக் குண்டாங் கற்பு......"

இங்கு ஆணவம் ஒரு பெண்ணாகவும், ஆன்மாக்கள் கணவன்மாராகவும் உருவகிக்கப்பட்டிருக்கின்றன. பந்த நிலையில் ஆன்மாக்களை ஆணவமாகிய பெண் பற்றிநின்றும், அவ்வான்மாக்களுக்குத் தன்னைக் காட்டாது நிற்கின்றது. இது ஆணவமாகிய பெண்ணுக்கு உள்ள ஒரு கற்பு நெறியாக இதில் விளக்கப்படுகின்றது.

(10) "அருக்கனென நிற்கு மருள்......."

சூரியன் இல்லாவிட்டால் நாம் எத்தொழிலும் செய்ய முடியாது என அறிவோம். பயிரிடவும், அதனைச் சேமித்துக்கொள்ளவும், சமைத்து உண்ணவும் சூரிய ஒளியே உதவுகின்றது. அதுபோன்றே திருவருளும் பிராரப்தம், ஆகாமியம் சஞ்சிதம் ஆகிய வினைகளை அனுபவிக்கச் செய்தற்கு மட்டுமன்றி, அவ் வினையை நீக்குதற்கும் துணையாக உள்ளது என்பதை விளக்குகின்றது இத்தொடர்.

### நினைவுக் குறிப்புகள்.

இறைவன் அகரவுயிர் போன்றவன்; எங்கும் நிறைந்துள்ளவன்; ஆன்மாக்களின் ஆணவ நோயைப் போக்கும் திருவருளாகிய மருந்தை யுடையவன்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## நல்லூர் "ஸ்ரீ ஸ்கந்தன்" தண்ணீர்ப் பந்தலில் சங்கீத கதாப்பிரசங்கம்

—0—

நாளை (22-8-64, சனிக்கிழமை (கோவில் 10ம் திருவிழா) முதல்தீர்த்தத்திருவிழா (6-9-64) வரையும் தினமும் இரவு 9–15 மணிதொடக்கம் 'அளவையூர் சஞ்சீவி அருட்கவி, சீ. விநாசித்தம்பி அவர்களால் 'கண்ணுதற் பெருமான் நல்கும கடவுள்" என்னும் தலையங்கத்தில் "முருகனைப் பெற்ற பரமன்' 'சரவணப்பொய்கையில் சண்முகனுடல்' 'சும்மா இருசொல்லற' 'ஈசனுடன் ஞான மொழி பேசுமுகம்' 'சிறை வெட்டிவிட்ட பெருமான்' 'வள்ளிக்கு வாய்த்தவன்' ஆகிய பொருட்கள் சம்பந்தமான சங்கீத கதாப்பிரசங்கம் நடத்தப்பெறும். (ந—வி)

## சைவப் பெரியார் திரு சு. சிவபாத சுந்தரம்பிள்ளை தினம்

சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை தினம் சென்ற வாரம் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. அவர் பொதுப்பட கல்வி யபிவிருத்திக்கும் சிறப்பாகச் சைவ சமய வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டுகளை விளக்கி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன அவர் எழுதிய 'சைவபோதம்' என்னும் சமயபாட நூல்களையும் திருவருட்பயன் உரையையும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சைவசமய நூல்களையும் இக்கால மாணவர்கள கற்பது அவர்கள் சைவவாழ்க்கை அநுட்டிக்கத் துணையாக விருக்குமெனவும் விளக்கப்பட்டன.

———

## சைவமுந் தமிழும் ஒன்றே

———

## கொடிக்கவி உரை வெளியீட்டு விழா

———

"தமிழ்மொழி வளர்ச்சியடைந்தால்சைவம்தானேவளரும். அதுபோலச் சைவம் வளர்ந்தால் தமிழ் வளரும். நமது சமயத்தவர்களில் சமய அறிவிற் குறைந்தவர்கள் இதுபோல ஆக்கப்படும் நூல்களினுல் நமது சமய அறிவைப் பெருக்கிக்கொள்ள உதவியாக இருக்கும். இவ்விதமான பணிகள் மேன்மேலும் வளர்ந்து வர வேண்டும். இதனுல் நமது சமூகத்திற்கு அதிக பலன் கிடைக்கக்கூடியதாக இருக்கும்."

இவ்வாறு பாராளுமன்ற உடுவில் பிரதிநிதி திரு. வி. தருமலிங்கம் வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தினரால் வண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் 16 – 8 – 64 - ல் நடத்தப்பெற்ற கோடிக்கவி வெளியீட்டு விழாவிற் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த மாமன்றத்தின் தலைவர் வை. இரகுநாத முதலியார் தமது தலைமையுரையில் சைவ சமயத்தின் வளர்ச்சி நல்லொழுக்கத்தில் தங்கியுள்ளது. அதுவே சைவக் கலாச்சாரமாகும். மேல் நாட்டுக் கலாச்சாரம் நம்மில் புகுந்து எம்மை அழிவுப்பாதையில் கொண்டு செல்லுகிறது. மேல்நாட்டு அறிஞர்கள் கீழ் நாட்டுச் சமய நூல்களைக் கற்றுணர்ந்து சைவ சித்தாந்த அடிப்படையில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பெயருக்கும் புகழுக்கும் ஆசச் சமயத்தை வளர்க்க முற்படாமல் உண்மையாக உடல் பொருள் ஆவி மூன்றையும் இளைஞர்கள் சமயத்தொண்டுக்கு அர்ப்பணம் செய்ய முன்வர வேண்டும், எனக் குறிப்பிட்டார்,

முன்னைநாள் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது. மேல் நாடுகளிலும் இளைஞர்களே சமூக இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கின்றார்கள். ஊக்கத்தினுல்தான் நமது சைவ சமயமும் வளர்ச்சிபெற முடியும். இளைஞர்கள் சமய அறிவைப் பெற்று நாட்டுக்கு நற்பணிசெய்ய முன்வர வேண்டும்.

சமய அடிப்படையில் கல்வி போதிக்கப்பட்டு வந்தால் தான் எதிர்காலத்தில் பண்புடைய மக்கள் தோன்றுவார்கள். ஆதலால், அதனை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னர் எல்லாப் பாடசாலைகளிலும் அவரவர் சமய அடிப்படையில் கல்வி கற்பித்து வர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசாங்கம் பாடசாலைகளை எடுக்க முன்னர் கிறிஸ்தவப் பாடசாலைகளில் பெரும்பாலும் சைவ மாணவர்களே படித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் பாடசாலைகளில் தலைமையாசிரியர்களாகவும், உதவியாசிரியர்களாகவும் கிறிஸ்தவர்களையே நியமித்து சைவப்பிள்ளைகளின் சமய அறிவைப் பாழாக்கினார்கள்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனர் அருளிச்செய்த

# திருவுந்தியார்

## மூலமும் — உரையும்

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்றொடர் - 5)

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற. (6)

கொ — கூ: நம் செயல் அற்று, இந்த 'நாம்' அற்ற பின் (நம் செயல் ஆனது) நாதன் தன் செயல் (ஆகத்) தானே (இருக்கும்) என்று உந்தீபற; (அவன்) தன்னையே (நமக்குத்) தந்தான் என்று உந்தீபற.

உரை: நம் செயல் அற்று - எமது (பசு போதமாகிய) செயல் ஒழிந்து,

இந்த 'நாம்' அற்றபின் — (நல்வினை தீவினைகளை இயற்றுமாறு ஊக்குவிக்கும் ஆணவத்தின் இயல்பாகிய) இந்த 'நாம' என்னும் அகங்காரமும நீங்கிய பின்னர்,

நாதன் தன் செயல்தானே எமது செயல் எல்லாம் திருவருளை அதிட்டித்து வந்தருளும் பசுபதி ஆகிய இறைவனது செயலாகவே இருக்கும்; என்று உந்தீபற —

தன்னையே தந்தான் — (அங்ஙனம், நாம் எல்லாம் தானேயாய், நம் செயலெல்லாம் தன் செயலேயாய் இருக்க எம்மை ஏற்றுக் கொண்டமையால்) அவன் இதுவரையும் பெறாத பேரின்பப் பொருளாகிய தன்னையே எமக்குத் தந்தாண்டான்; என்று உந்தீபற—

விளக்கவுரை: பசுபோதமொழிந்து சிவபோதம் தலைப்படுதலினாலேயே இறைவனுடன் அத்துவிதமாய்க் கலந்து பேரின்பந் துய்க்கலாம் என்பது.

இச்செய்யுளால் வலியுறுத்தப்பெற்றது. இனி, இங்ஙனம் பசுகரணங்களெல்லாம் சிவகரணமாய், பசு போதமெல்லாம் சிவபோதமாய் அமைந்த நிலையிலேயே நாயன்மார்கள் அற்புதங்களை நிகழ்த்தினர் என்பதும் ஈண்டு உணரத்தக்கது.

இச்செய்யுளின் பொருளமைந்த திருக்களிற்றுப் படியார்ச் செய்யுளும் பழையவுரையும் வருமாறு:

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண். 12.

"பாலை நிலம் நெய்தல் நிலமாகப் பாடியதன்மையும், பாம்பு விடம் தீரும்படிக்குப் பாடியதன்மையும், முன்பு முதலை விழுங்கின சிறுபிள்ளையுடைய மரணத்தைப் பின்பு காலனை ஏவித் தீர்த்த தன்மையையும் அறிந்து, அந்தத் தெய்வத்தன்மை உடையவர்களுக்கு நம்முடைய கருவிகள் போல வல்லாமையைத் தெரிவாயாக.

பாம்பு ஆகுபெயர்; அறிந்து என்னும் எச்சம் வருவிக்க. இதனுள் முன்னூற்சூத்திரத்திற்றொகையை விரித்துக் கண்டுகொள்க. இக்கதைகளைப் பெரிய புராணத்திற் காண்க. பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப்பாடியதும் சம்பந்தர் செய்த அற்புதங்கள்; கராங்கொண்ட பாலன் மரணந் தவிர்த்தது சுந்தரர் செய்த அற்புதம்."

தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் — ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பையவிளையுமெனப் பார். 13.

"நித்திரை வந்தவர்களை நல்ல மெத்தையிலே கிடத்தினபின்பு, தாங்கள் தாமே சீக்கிரத்தில் உறங்குவார்கள், அதுபோல, ஞானசாரியனுடைய கிருபாகடாட்சம் அடிமைகொண்ட பின்பு அந்த அருள் வந்து பொருந்திக் கிரமத்திலே நேயமும் வந்து பொருந்துமென்றறிவாயாக.

சட்ட திசைச்சொல்; உவமை உவமேயம் உய்த்துணர்ந்து கொள்க. இதனுள், ஆசாரியருடைய தீட்சை இல்லாமல் ஞான்ம் வராதென்பது கண்டுகொள்க."

—தொடரும்

### (இந்துசமயம்) மாதிரி வினாவிடைகளும் நினைவுக்குறிப்புகளும்

( 2ம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மாக்கள் சதசத்தாந் தன்மையை யுடையன; அறிவுப் பொருளாயிருந்தும் ஐம்பொறிகளின் உதவிகொண்டே விஷயங்களை அறிவன; வினைகளைச் செய்து திருவருளை அடைவதற்கு மாயைப் பொருட்களை உபகாரமாய்க் கொண்டன; திருவருளுக்குள் இருந்தும் ஆணவத்தின் பிடிப்பால் திருவருளை அறியாதிருக்கின்றன. இந்த ஆணவம் ஆன்மாக்களைப்பற்றியிருந்தும் தன்னையவற்றுக்குக் காட்டாதிருப்பதோடு, ஆன்ம அறிவை மறைத்து இருள் போலக் காட்டி நிற்கின்றது. திருவருள் ஆன்மாக்கள் வினைகளை அநுபவித்தற்கும், அவற்றினின்றும் விடுபடுவதற்கும் காரணமாயுள்ளது.

—தொடரும்.

### கிரேக்க தத்துவ ஞானம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஊக்கியிருக்கலாம். தேல்சின் கொள்கை பொய்யே ஆகினும் புராணமுறையன்றிய ஒரு விளக்கவழியை இவர் மேற்கொண்டது போற்றத் தக்கதாகும்.

தேல்சை அடுத்து அனெக்சிமாண்டர் என்ற கிரேக்க தத்துவ அறிஞரை அறிகிறோம் இவருடைய காலம் கி. மு. 610 — 545. சூடும் குளிரும், உலர்ச்சியும் ஈரமும் போன்ற இயற்கைப் பண்புகளுக்கிடையே முரண்பாடடைக் கண்ட இவர் தண்ணீர் தனது பண்புகளுக்கு முரணான பண்புகளையுடைய பொருள்களைப் பிறப்பிக்கும் என்று நம்பினரில்லை. முதற் பொருள் அதிலிருந்து தோன்றியுள்ள சடப்பொருள் வகைகள் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டிருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். அதற்கமைய முதற் பொருள் "எல்லையற்றபொருள்" என்று கூறினர். எல்லையற்ற பொருளென்பதனல் துணியப்படாத ஒரு பொருளைக் கருதி அதிலிருந்தே துணியப்பட்ட பொருள்களான மண், நீர், வாயு, தீ ஆகியன பிரிந்து பிறந்தன, அல்லது "வேருகின" என்று கூறினர். இவரது கொள்கையின்படி மண் மையத்திலமைய ஏனைய மூன்றும் ஒன்றன்மேலொன்ருகப் படைகளாக அமைந்துள வாகும். இவற்றிலிருந்தே நட்சத்திரங்கள், சந்திரன், சூரியன் போன்ற வான் பொருள்களும் நிலத்தில் நாம காணும் பல்வேறு பொருள்களும் பிறந்தனவாகும். நாம வசிக்கும் புவி இடத்தில் ஒரு மைய நிலையைக் கொண்டதென்றும் அது வடிவத்தில் ஒரு திண்மத்தூணை ஒத்ததென்றும் கூறினர்.

மிலெற்றசு தததுவ அறிஞர் வரிசையில் மூன்ருவது அறிஞர் அனெக்கிமெனிசு என்பவர். இவர் கி, மு. ஆரும் நூற்றுண்டில் 540 — 545 வரை வசித்தார் இவர் முதற் பொருள் ஒன்றே என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டார். ஆனல், அப்பொருள் காற்று அல்லது நீராவியே என்றும் அதிலிருந்தே ஒடுக்கத்தினல் அல்லது அரிதாக்கத்தினல் ஏனைய பொருள்கள் எல்லாம் தோன்றினவென்றும் சொன்னர். இன்னும் இவர் புவி ஓர் உயிருள்ள, சுவாசிக்கும அங்கியென்றும் (Organism) கருதினர். —தொடரும்

### சைவப் பிரசங்கம்

18-8-64வெள்ளிக்கிழமை பி.ப 6 மணியளவில் தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் 12ம் திருவிழாவன்று சைவப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டியவர்கள் 'ஆவிக்குமோசம் வரும்' என்ற கந்தரலங்காரத் திருச்செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு நூற்றுக்கணக்கான அடியார்கள் சமுகத்தில் ஒருசிறந்தசொற்பெழிவாற்றினர். உடல் நிலையாமையைப்பற்றியும் பிறவியின் நோக்கம் இறைவனடி சேரும்படி பணிபுரிதலென்பதுபற்றியும் கூறியபின் மக்கள் இறைவனைத் தலையினல் வணங்க வேண்டுமெனவும் வாயினல் முருகன் நாமத்தைக் கூறவேண்டுமெனவும் இவ் விதக் [illegible] இக்காலமக்கள் [illegible] ததெனவும் கூறினர்.

### எட்டாதபழப்புளிக்கும்

(ஈழுச்சேனு)

( சென்றவாரத் தொடர்ச்சி )

கண்களில் இருந்து எட்டிப்பார்த்துச், சுடர்விட்டுக் கொண்டிருந்த இரண்டு சொட்டு ஆனந்தக் கண்ணீரைப் புலவர் துடைத்துக்கொண்டார்; புன்முறுவலோடு கதையைத் தொடர்ந்தார்.

"அபிராமி தயிர்ச்சட்டியோடு எழுந்தாள் என்று சொன்னேன்? .... ... ... ஆமாம்! அவள் அடுப்பண்டை போனாள்; பக்குவமாகத் தயிரைத் தாளிதச் சட்டியிலே ஊற்றினாள்.

சட்டியிலிருந்து எழுந்த புகை — தாளிதப் புகை — 'குய்' புகை அவளது குவளை மலர் போலுங் கண்ணை உறுத்தியது. அவள் கண்ணைப் பொத்தவில்லை; கசக்கவில்லை; கண்ணீர் சிந்தவில்லை; குழம்பு நன்ருய் அமைய வேண்டும் என்பதிலே அவளது கண்ணுங் கருத்தும் இருந்தன போலும்! அவள் அந்தக் குய் புகையிலும் இமையா நாட்டம் உடையவளாய், குழம்புபண்ணத் தொடங்கினாள்; அகப்பைக்கோ ஓய்வு இல்லை; அது சுழன்று சுழன்று துழாவிக்கொண்டிருந்தது. சற்றே தரித்தாலும் 'ஏதாவதொன்று அடிப்பிடித்து விடுமே' என்ற எண்ணத்தாற் போலும், கண்ணிலே குய் புகை கமழவும், சற்றேனும் இமைத்தலின்றி, அகப்பை கொண்டு துழாவித் துழாவி

( தொடர்ச்சி 4-ம் பக்கம்)

இவ்வாரம் 23-8-64 — 30-8-64

### உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தனதானிய லாபம், புகழ்வரும் தடைகள் நீங்கும். நலம்குறையும்,

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

கலகங்களுக்கு முந்தக் கூடும் நேத்திர ரோகம் நிகழக கூடும், நிம்மதி நீங்கும். புதுச்செயல்கள் தடைப்படும். உட் பகைவரால் தொந்தரவு உண்டாகும்.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம பாதம்.

புதுக்கருமங்களால் ஆதாயம். இகழ்ச்சி உண்டு, சுகக் குறைவு, தந்தைவழி உறவினரால் தொந்தரவு,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

பணிநிலையில் திருப்தி ஞாயிறு திங்களில் கவனம். எஞ்சிய நாட்கள் புதுச்செயல்களுககு ஏற்றவை. உறவினரால உதவி.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

வீட்டுத் தொந்தரவு. நிம்மதிக் குறைவு. தொழில் அபிவிருத்தி. தானிய வரவு. பழைய முதலீடுகளால் பலன். செவ்வாய், புதன் வியாழன் முற்பகலில் கவனம்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தொழில் வளர்ச்சி. புதுக் கருமங்களால் பலன். புகழ் வரவு. பகைவர்க்கு அழிவு. அற்ப சுகக் குறைவு. வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி கவனம்,

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

நிம்மதிக்குறைவு. புதுக்கருமங்களுக்குத் தடை, முயற்சிகளுக்குத் தடை. தந்தைவழி உறவினரால் தொந்தரவு.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தாய் தந்தையரின் நலம் குறையும். வாகனங்களால் தொந்தரவு வரும். முயற்சிகளில் கவனம், சுகம் குறையும்,

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பணிநிலையில்முன்னேற்றம்,வீட்டுச் செயல்களில் கலக்கம், சுகம் குறையும், உரிமை தடைப்படும், [illegible] செயல்கள் தடைகளுடன் நிறைவேறும்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

### சைவமும் தமிழும்

2-ம் பககத் தொடர்ச்சி

திறமையுள்ள சிரேஷ்ட ஆசிரியர்கள் கிறிஸ்தவராக இல்லாதபடியால் கனிஷ்ட ஆசிரியர்களாயுள்ள கிறிஸ்தவ ஆசிரியர்களை நியமித்து வந்தார்கள். இந்த முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமானது.

ஒரு சமூகம் நல்ல சமூகமாக வாழ வேண்டுமானால் மேலைத் தேசத்தவரால் கொண்டுவரப்பட்ட அந்நிய கலாச்சாரத்தையும், பண்பாட்டு முறைகளையும் இங்கு இன்னும் பரவச்செய்யும் கிறிஸ்தவர்கள் அந்நோக்கங்களை விட்டொழிக்க வேண்டும். நம்நாட்டுப் பண்புக்கேற்ற முறையில் அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

சைவசமயம் நமது வாழ்க்கை நெறியுடன் தொடர்பு கொண்டுள்ளது. அது நம்மையெல்லாம் நல்ல வழியில் நடத்திச்செல்லும் தன்மை வாய்ந்தது; தூய நெறி முறைகளைக் கொண்டதுமாகும். அதன்படியொழுகி நற்பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வழக்கறிஞர் திரு. நம. சிவப்பிரகாசம், பண்டிதர் திரு. இ. திருநாவுக்கரசு, திரு. மு. வைத்தியலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

நூலின் உரையாசிரியர் சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்கள் நூலினை அறிமுகம் செய்த பின்னர் நூலின் முதற்பிரதியை திரு. கி. உ. சோமசேகரம் அவர்கள் வெளியிட்டார். அதனை திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் பா.உ. பெற்றார். ———

மலைமகளே! சூரியன் ஆயிரக்கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிருர். ஆனல் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனல் முடியாது. உமது கோமளகரமான பாதங்களால் ஆன்மாக்களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

—நாராயண பட்டோத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாத பழம் புளிக்கும்!

[ 3-ம் பக்கத் தொடர்ச்சி ]

ஆக்கினுள். அந்தத் தீம்புளிப்பாகரை — தயிர்க் குழம்பை! 'இவ்வளவையும்' பார்த்திருந்த எனக்கு அங்கு இருக்கை கொள்ளவில்லை; அவள் ஆக்கிய தீமபுளிப் பாகரின் இனிய மணம் மூக்கைத் துளைக்க, அவளது அன்புபற்றி இழுக்க, வாயிலும் மனத்திலும் நீர் சுரக்க, எழுந்து ஆரும் அறியாமலே சமையலறையுட் புகுந்தேன்.

அவள், முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தாலும் இன்சொல்லோடு என்னை வரவேற்றுள், இலையிலே சோறு படைக்கப்படுகிறது; ஐந்து சுவைக் கறிகள் (முன்னராக்கி வைக்கப்பட்டவைகள்) இடப்படுகின்றன. அம்மட்டோ! ஆறுவது சுவைக்கென்று...... என் அகத்தடியாள் ஆக்கிய தயிர்க் குழம்பு விடப்படுகின்றது. ... ... ... இருந்தாலும் உண்ண முடியவில்லை... ஏன்? எனக்கே விளங்கவில்லை!...... கை சோற்றைத் தை வந்து வலஞ் செய்ய ... என்னை மறந்து இருந்தேன்.

அவள் என்ன நினைத்தாளோ? இருந்தாள் குழைத்தாள்; ஒரு சிகையை என் கையிலே வைத்தாள்; உண்ணுக என்றுள்...

இம்மட்டிலும், எனது வயிற்றில் முக்காற் பங்கும் நிரம்பிவிட்டது; — அவளது அன்பினுல் வந்த இன்பமாகிய உணவு அம்முக்காற் பங்கிலும் குடியிருந்தது. அப்பால் காற் பங்கு!...... அது அவள் குழைத்து இட்ட ஒரு சிகை (-பிடி) யால் மெல்ல மெல்ல நிரம்பியது; இனி இடம் இல்லை. எழுந்தேன் — பழைய பாடல் ஒன்று என் நினைவுக்கு வந்தது:

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாது உடீஇக்
குவளை உண்கண் குய்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

இப்படி நாளும் மகிழும் அன்புடையளாய்,

"அறுசுவை உண்டி அமர்ந்து (என்) இல்லாள் ஊட்ட
மறு சிகை நீக்கி"

நான் உண்டு வரலானேன். இந்த இன்ப நிலையிலேகூட, என் வயிறும் உடலும் சுருங்கி வாழும் துரதிஷ்டசாலியேயானேன்.

ஆதலினலே, என் உடலைத் தேற்றுவதற்காக, அதிக இன்பமும் அதிக துன்பமுந் தராத விருந்துகளிலே பங்கு பற்றி, அதிகமாய் உண்ண ஆசைப்பட்டேன். அந்த ஆசையிலேகூட, மின்னுமல் முழங்காமல் இடிவிழுந்தது; கைக்கு எட்டிய விருந்து வாய்க்கு எட்டாமற் போய்விட்டது. இந்தத் தோல்வியைத் தாங்கமாட்டாமற்றன் எட்டாத பழம் புளிக்கும் என்று நரி சொன்னது போல, "கடையிலே வாங்கி நீட்டும் கருத்திலா விருந்து" என்றேன்.

கோடுறு தருவில் ஏறிக் குலைபல ஈன்று நின்ற
காடுறு திராட்சை கண்டு கால்களைத் தூக்கித் தாவிப்
படுறுநரியார் அன்று "புளிக்கும்இப் பழம்" என்றுற்போல,
கேடுறு விருந்தென் றேன்நான் கிடைத்தில(து) ஆதலாலே!

அஃதல்லாமல், விருந்து வைத்தவரிடம் எனக்கு எந்தவிதமான வெறுப்பும் இல்லை; ஐயா! என்றுர் புலவர்.

மழை பெய்து ஓய்ந்து, உஷ்ணந் தணிந்து எங்கும் தண்மை பரவியதுபோன்ற சுக அனுபவம் எனக்கு உண்டாயது.

—::—


யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால், வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் 21-8-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புத்தூர் வடக்கு,
கந்தையா முருகேசு
—வழக்காளி

இல. M.B. 4951

எதிராக

புத்தூர் வடக்கு,
1. சின்னத்தம்பி பெரியதம்பியும் பெண்
2. அன்னமுத்தாச்சியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 4951-ம் இலகக வழக்கில் எனககுக்கிடைதத கோட்டுக கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் முதல் இருதுண்டுக் காணிகளை, 1964-ம்ஹூ புரட்டாதிமீ 19உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிகளுககுள் வின்று பிரசித்த ஏலததல் விற்கப்படும். மூன்றும் துண்டுக்காணியை 21உ புரட்டாதமீ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1155-ம், 23 - 7 - 62 தொடக்கம் 6-12-62 வரைக்குப ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 181-15 சதமும்.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் கிழககுப்பகுதி புத்தூர் கோயிற்பற்று, புததூர் வடககு இறை "பனை வின்ற தரவை" பர. ஒகல், இலா 10 (பத்து) இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை ஆறுமுகததுககு உரிய ஆதனம், வடக்கு சின்னத தம்பி பெரியதம்பிககும் சகோதரத்துக்கும் உரிய ஆதனம, மேற்கு பீதாம்பரம் பெண் அன்னப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம, தெற்கு வேலுப்பிள்ளை ஆறுமுசத்துக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும், பதிவு இலககம் K 132/110,

2. ஷெ இறை "அமரக்ந்து" பர. நெல். இலா, 3 (மூன்று) இதற்கு எல்லை கிழக்கு சின்னத் தம்பி கைம்பெண் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு அப்பா கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், மேற்கு பிள்ளையினர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு வல்லிபுரம் பெண் தெய்வானைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இதடங்கலும். பதிவு இலக்கம் K 132/111,

3. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக கோயிற்பற்று மட்டுவில் இறை, "வீரமைந்தன் அத்தை" பர. வில. இலா. 13⅛, இதில் தென்பக்கத்து அரைவாசிப் பங்கில் பரப்பு 3-ம், குளி 6 3/16-ம். இதற்கு எல்லை கிழககு தம்பிப்பிள்ளை பெண் முத்துப் பிள்ளையின் ஆதனம், வடககு ஐயாகுட்டி பெண் பொன்னம்மாவின் ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு அருணுசலம் பெண் காமாட்சிப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும். பதிவு இலக்கம் F 212/138.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளர்
16 A, அம்மன் ரேட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 146 21-8-64

## இவ்வாரம் உங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பொதுவாக நல்லகாலம். பகை நீங்கும். பொதுவாழ்வில் வெற்றியும் புகழும் தோன்றும். அற்ப சுகம் குறையும்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

சுகக்குறைவு, சொந்தச் செயல்களில் வளர்ச்சி, தனவரவு, புகழ் வரவுண்டாகும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

[illegible]
புதுக் கருமங்கள் தடைப்படும். நீம்மதி நீங்கும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாவளை இயற்றுலை
செம்பன் மயிலன் -வழக்காளி.

எதிராக

இல 2754
தாவளை இயற்றுலை
1. சின்னததம்பி தம்பிராசா
2. பெண் நாகம்மா
-எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிககோட்டில் 2754 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக காணியை 1964-ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி மாதம் 19 ம் திகதி (19-9-64) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக்காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 600-ம், இதில் ரூபா 600க்கு 16-9-63 திகதி தொடக்கம் 27-2-64 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்குப் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 152-60 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிக் கோவிற்பற்று தாவளை இயற்றுலையிறை 'கட்டைப்பனங் குளம்' நெற்பரப்பு (15ம்) எல்லை கிழக்கு தம்பு மயில்வாகனததின் ஆதனம். வடக்கு சின்னக்குட்டி பெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு தம்பையா செல்லையாவின் ஆதனம். தெற்கு குளமும் சின்னன் கந்தவனத்திருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 24-7-1964,
M. 144 21-8-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாதகல், தாமோதரம்பிள்ளை செல்லத்துரை கைம்பெண் காந்திமதி —வழககாளி

எதிராக

இல. M.B. 3817
மாதகல்,
1, சின்னத்தம்பி கந்தையா
2. பெண் கண்ணுததை
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் M,B, 3817-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக காணியை 1964 - ம் ஆண்டு செப்டம்பர் (புரட்டாதி) மாதம் 16-ம் திகதி (16-9-64) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2287-50-ம், இதில் ரூபாய் 1500-க்கு 9-1-61 திகதி தொடககம் 19-11-61 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத தொகைககும் இறுபடும்வரைககும் 100-கது 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 186-95 சதம், இதில் ரூபா 1800 கோட்டில் கட்டப்பட்டது.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாதகலிறை, "செயாவத்தை" கிலப்பரப்பு 11-ம், குளி 17⅛-ம், கிணற்றுப்பங்கும் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடககு ஒழுங்கை, மேற்கு மரியாப்பிள்ளை பெண் காலஞ் சென்ற வராஞ்சினுக்கும் கந்தர் சின்னத் தம்பிககு முரிய ஆதனங்கள், தெற்கு கந்தர் சின்னததம்பிக்கும் தில்லையர் பெண் காலம் சென்ற பாறுபதிக்குமுரிய ஆதனங்கள் இதில் வடககெல்லைப்பக்கமாக 4½ அடி அகலங்கொண்ட பாதை போககுவரததிற்குப் புறநீங்கலாக மிகுதியடங்கலும், மூற் பதிவு E 320/84.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 3-8-1964.
M. 143 21-8-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T. 1017.

மூளாய், மரணசாதனமின்றி காலஞ் சென்றுபோன சண்முகம் குமாரசாமி,

மூளாய், சண்முகம் குமாரசாமி கைமபெண் தெய்வானைஅம்மாள் தததுவகாரி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் T. 1017-ம் இலக்க வழக்கில் எனககுக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக் கப்படும் ஒருதுண்டுக காணியை 1964-ம்ஹூ புரட்டாதிமீ 12உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப் படும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோயிற்பற்று மூளாய் இறை, "பெரியபிட்டி" பர. நெல். இலா. 12-ம் அதைச் சேர்ந்தவைகளும், கிழக்குப்பக்கத்து எல்லையில் இருக்கும் கிணற்றில் மூன்றிலொரு பங்கும், இதற்கு எல்லை கிழக்கு செல்லப்பா கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம் வடக்கு தங்கமுத்துவின் ஆதனம், மேற்கு கருணுகரர் செல்லப்பாவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு நாராயணபிள்ளை பெண் காச்சிப் பிள்ளையின் உரிமைக்காறருக் குரிய ஆதனம், இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்,
16 A. அம்மன் ரேட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்,
M 147 21-8-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

No, M,B. 4946.
யாழ்ப்பாணம்,
வட்டுக்கோட்டை மேற்கு
சுப்பிரமணியம் அம்பலவாணர்
—வழக்காளி

எதிராக

29, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்
சோதி நாகரத்தினம் பெண் காலஞ் சென்ற அகிலாண்டநாயகியம்மாளின் சொத்துககுத் தததுவகாரனுக, 29 பருத்தித் துறை வீதி யாழ்ப்பாணம், சோதி நாகரத்தினம் கனகசபை,
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B, 4946-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக் கப்படும் ஒரு துண்டுக் காணியை 1964-ம்ஹூ ஐப்பசிமீ 3-ம்உ (3 - 10 - 64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 16,333/33-ம், 20-7-62 தொடக்கம் 21-5-63 வரைக்கும் ரூபாய் 10,000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 481/66-ம்.

ஆதன விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாள் கோவிற்பற்று, எழுதுமட்டுவாள் வடக்கு இறை, "சரவணதோட்டம் நாடு அல்லது நொங்காவளையும் மறு பிரிவுகளும்" ஏக்கர் ஐம்பது (50 A - OR - OP) தென்னைகள் பனைகள் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கையும் ஆறுமுகம் பெண் சிவயோகநாயகியம்மாளின் ஆதனமும், வடக்கு வீரசிங செல்லனினதும் வல்லி தொம்மையினதும் பங்காளரினதும் ஆதனம், மேற்கு கந்தர் கணபதிப்பிள்ளையினதும் அம்பலவாணர் சரவணமுத்துவினதும் அம்பலவாணர் கனகசபை மகள் பாலசுந்தரநாயகி யம்மாளினதும் ஆதனங்கள், தெற்கு முருகேசு வயித்திலிங்கத்தினதும் பங்காளரினதும் ஆதனம். இதடங்கலும், பதிவு F 285/254.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம்,
M, 145 21-8-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org